**<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>**

**<u>சி.சி. 214/2021</u>**

2023 ம் ஆண்டு ஜுன் மாதம் 05 ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 2 வது நபாின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.கௌதம், சுருக்கெழுத்துதட்டச்சர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாலா | வயது | 45 |
| த . பெ . (அ)க . பெ . | குழந்தை | தொழில் | விவசாயம் |
| ஊர்/பணிபுரியுமிடம் | பெரியகரம் | சமயம் | இந்தியன் |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u> வழக்கின் எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை.

நான் பெரியகரம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 மணி எனது தங்கையின் கணவர். வழக்கின் எதிரியை தெரியும். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு தேதி மாதம் நினைவில்லை. இரவு சுமார் 10.00 மணிக்கு எனது அக்கா கணவர் அண்ணாதுரையின் நிலத்தில் ஆழ்துளை கிணறு போட்டுக்கொண்டிருந்தோம். என்னுடன் அ.சா.1 மணி மற்றும் போர் போடும் நபர்கள் இருந்தார்கள். அப்போது எதிரி பாபு அந்த வழியாக வந்தார். அவர் அ.சா.1– டம் போர்வண்டியை எங்கு நிறுத்தி வைத்துள்ளாய் என்று கேட்டார். அதற்கு அ.சா.1 ஒதுங்கி செல்லும்படி சொன்னார். அப்போது எதிரி அ.சா.1 ஐ கண்ணத்தில் அடித்துவிட்டார். அதன்பிறகு எதிரி வீட்டிற்கு சென்று அவரது தந்தை ஜெயபாலை அழைத்து வந்து அ.சா.1 –ன் கைகளை ஜெயபால் பின்னால் பிடித்துக்கொள்ள எதிரி அ.சா.1 ஐ தாக்கினார். அதில் அ.சா.1 க்கு தோள்பட்டையில் சவ்வு கிழிந்துவிட்டது. சுமார் 2 வருடங்கள் அ.சா.1 வலியால் அவதிப்பட்டு வந்தார். மேற்படி சம்பவத்தில் எதிரியும், அவரது தந்தை ஜெயபாலும் என்னையும், அடித்து நெஞ்சின் மீது உதைத்தார்கள். திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தோம். போலீஸார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=

(1) ஜெய்சங்கர் வீட்டிற்கு செல்லும் கொடி வழியில்தான் இந்த சம்பவம் நடந்தது என்றால் சரிதான். அந்த கொடி வழி பெரியகரத்திலிருந்து மான்கானூர் செல்கிறது. அந்த வழியாக நான்கு சக்கர வாகனங்கள் செல்லமுடியும் என்றால் சரிதான், மழை காலத்தில் இருசக்கர வாகனம் மட்டும்தான் செல்லமுடியும். எனது அக்கா கணவர் மணிக்குதான் அந்த போர் போட்ட நிலம் பாத்தியப்பட்டது. போர் போட ஆரம்பித்த நேரம் என்ன என்றால் மதியம் 2.00 மணி. எத்தனை மணி வரை போர் போட்டார்கள் என்றால் 10.00 மணி வரை போட்டார்கள், அப்போது பாபு நிறுத்தியதால் போர் போடுவதை நிறுத்திவிட்டார்கள். மணிக்கும், பாபுவுக்கும் முன்விரோதம் எதுவுமில்லை. சம்பவத்தின் போது போர்வண்டிக்காரர் 6 பேர், நான் மற்றும் மணி ஆகியோர் இருந்தோம். போலீஸார் என்னை மருத்துவமனையில் பார்த்தார்கள், விசாரிக்கவில்லை.

(2) மணியை மட்டும் விசாரித்தார்கள். போலீஸார் என்னை எப்போது விசாரித்தார்கள என்றால் டிஸ்சார்ஜ் ஆன அன்று ஏதோ கேட்டார்கள் பின்னர் வீட்டிற்கு போகச்சொல்லிவிட்டார்கள். போலீஸார் மணியை தான் விசாரித்தார்கள், என்னை விசாரிக்கவில்லை. மருத்துவரிடம் என்னை என் அக்க மருமகன் ரவிசந்திரன் அழைத்து சென்றார். மருத்துவர் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். மருத்துவரிடம் 2 நபர்கள் அடித்ததாக சொன்னேன். பெண் யாரும் அடித்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அப்படி பெண் அடித்ததாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று இரவே மருத்துவமனைக்கு சென்றுவிட்டோம். போலீஸாரிடம் நான் அடிப்பட்ட விவரத்தை சொல்லவில்லை என்றால் போலீஸாரிடம் வயிறுவலி மற்றும் நெஞ்சுவலி உள்ளது என்று சொல்லியுள்ளேன். யார் அடித்தார்கள் எங்கு அடித்தார்கள் என்று போலீஸாரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் போலீஸாரிடம் பாபு, ஜெயாபால் இருவரும் அடித்ததாக சொன்னேன். நாங்கள் போர்வண்டியை நடுரோட்டில் நிறுத்திக்கொண்டு யாருக்கும் வழிவிடாமல் மதியம் முதல் இரவு வரை போர் போட்டுக்கொண்டிருந்ததை பாபு வழிவிடும்படி கேட்டதால் நாங்கள் அவரை மிரட்டிவிட்டு இவ்வழக்கை பொய்யான சங்கதிகளின் அடிப்படையில்

போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பாபு என்னை ஒருபோதும் அடிக்கவில்லை என்றால் சரியல்ல.
மறுவிசாரணை= இல்லை.